

# பனித்துளி செய்திகள்!

**“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**07.10.2024**

## 41. தாமதத்திற்கு மனந்தளராத ஜெபத்திற்கு கர்த்தர் பலன் தருவார்!

“**சா**த்தான் மூலமாய் ஜெபத்திற்கு தடங்கல் அல்லது தடைகள் ஏற்பட முடியும்” என்பதை நீங்கள் அறிந்து கொள்வது மிகவும் நல்லது. ஜெபத்திற்குரிய பதில், 3-வார தாமதத்தின் காரணத்தை கேட்டறிந்த தானியேல் மனநிறைவு கொண்டான்!

இன்றும் அநேக கர்த்தருடைய ஜனங்களுக்கு ‘ஜெபத்திற்கு தாமதம்’ என்ற போராட்டம் இருக்கத்தான் செய்கிறது. நீங்களோ உங்கள் ஜெபத்திலிருந்தும் விசுவாசத்திலிருந்தும் சிறிதேனும் விலகாதிருந்தால், புதுவெள்ளம் போல் தேவன் தமது பதிலை பொங்கிவழியச் செய்வார்! அதோடு சேர்த்து நீங்கள் எதிர்பாராத புதிய ஆசீர்வாதங்களையும் வழங்கி, உங்கள் ஜெபத்தை கனப்படுத்துவார்!

பாதாளம், தன்னால் இயன்ற எல்லா தீங்குகளையும் கர்த்தருடைய ஜனங்களுக்கு கொண்டுவர முயற்சித்துக் கொண்டே இருக்கிறான்! அதுவும் ‘கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்தவான்களை’ பன்மடங்கு ‘அக்கினி சூளையின்’ கொடூரத்தை கொண்டு வந்து கொட்டுகிறான்! இவை அத்தனை மத்தியிலும், பரலோகம் அவர்களை ஒருநாளும் கைவிடுவதில்லை! ஆமென்.

**- ரத்னம்**